**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.72/2015**

**வழக்கு சாட்சி: PW.8**

**தேதி: 09.02.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **செல்லச்சாமி** | **ஜாதி:** | **நாடார்** |
| **தந்தை பெயர் :** | **மனுவேல்** | **தொழில்:** | **ஆசிரியர் ஓய்வு** |
| **கிராமம்:** | **தெரம்புவிளைவீடு** | **சமயம்:** | **கிறிஸ்தவர்** |
| **தாலுகா:** | **கன்னியாகுமரி** | **வயது:** | **67/2024** |

**3 வது எதிரி ஆஜர். 1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் கன்னியாகுமரி மாவட்டம் பைங்குளம் அஞ்சல் தெரம்புவிளைவீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கீழுமுஞ்சிறை அரசு நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். எனக்கு 5 சகோதரிகளும், 2 சகோதரர்களும் உள்ளனர். எனது கடைசி சகோதிரி மரியராணிக்கு சம்பவத்திற்கு 20 வருடங்களுக்கு முன்பாக பெதலீஸ் என்பவரை திருமணம் செய்து கொடுத்தோம். திருமணத்தின் போது பெதலீஸ் சிவகங்கை மாவட்டம் திருமாஞ்சோலையில் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். திருமணம் ஆனவுடன் எனது சகோதரி மரியராணியும் பஞ்சாயத்து பள்ளியில் வேலை பார்த்தவர் பெதலீஸ் வேலை பார்த்த பள்ளிக்கு பணி மாறுதலாகி வந்து விட்டார். அவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தனர். பெதலீஸ் என்பவர் தகாத பழக்க வழக்கம் மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமையானர். எனது சகோதரி மரியராணியுடன் அவருக்கு பிரச்சனை ஏற்பட்டதால் நாங்கள் பேசி எனது சகோதரியை சிவகங்கையில் தனியாக வீடு பிடித்து வைத்தோம். கடந்த 29.010.2012ம் தேதி முதல் பெதலீஸ் பள்ளிக்கு வராமல் இருப்பதாக கேள்விப்பட்டோம். எனது சகோதரி மரியராணி எனக்கு போன் செய்து பெதலீஸ் பள்ளிக்கு வராமல் இருந்த விபரத்தை கூறினார். நாங்கள் பெதலீஸ் என்பவரை தேடினோம். 20.01.2013ம் தேதி எனது சகோதரி மரியராணி எங்கள் ஊருக்கு வந்தார். அங்கும் தேடினோம். பெதலீஸை

கண்டுபிடிக்கவில்லை என்பதால் அங்குள்ள புதுக்கடை காவல் நிலையத்தில் எனது தங்கை கணவரை காணவில்லை என புகார் கொடுத்தார். போலீசாரும் நாங்களும் தேடினோம். 21.02.2013ம் தேதி எனது தங்கை தனது கணவரை கொலை செய்தவர்களை போலீசார் பிடித்து விட்டதாக எனக்கு திருமாஞ்சோலையில் இருந்து போன் செய்தார். ஊரிலிருந்து நானும் தோட்டத்தை பராமரிப்பு செய்து வந்த சுகுமாறன் நாயரும் அங்கிருந்த கிளம்பி சிவகங்கை வந்தோம் வந்து காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் இருந்த எதிரிகள் செந்தில் மற்றும் வெள்ளைச்சாமி ஆகியோர்களை கொலையாளி என எனது தங்கை அடையாளம் காட்டினார். ஆஜர் எதிரி வெள்ளைச்சாமியை எனக்கு அடையாளம் தெரியும். ஆஜராகாத எதிரி செந்திலையும் தெரியும். சிவகங்கையில் இருந்து கிளம்பி அன்றிரவு நாங்கள் எங்கள் ஊருக்கு வந்து விட்டோம். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். சாட்சி தானாக தொடர்ந்து காவல் நிலையத்தில் இறந்து போன பெதலீஸின் ஆடைகளை காட்டினார்கள். நான் அவைகளை அடையாளம் சொன்னேன். அந்த ஆடைகள் ஏற்கனவே அரசு தரப்பு சான்று பொருட்களாக நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

இறந்து போன பெதலீஸ் எனது சகோதரி மரியராணியின் கணவர் என்றால் சரிதான். பெதலீஸிற்கு எதிரிகளுடன் தகாத பழக்க வழக்கங்கள் இருந்ததால் எனது தங்கையுடன் பெதலீஸ் பிரிந்து வாழ்ந்தார் என்றால் சரிதான். எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் அடையாளம் காட்டினார்களா என்றால் எனது தங்கையும் எதிரி செந்திலின் மனைவியும் அடையாளம் காட்டினார்கள். சம்பவத்திற்கு முன்பாக எதிரி வெள்ளைச்சாமியை எனது சகோதரிக்கு தெரியும். எனக்கு தெரியாது. எனது சகோதரி சொல்லித்தான் தெரியும். மற்ற எதிரிகளை சம்பவத்திற்கு பின்னீடு தான் தெரியும். எரிந்த நிலையில் இருந்த ஆடைகள், பெல்ட் ஆகியவைகளை போலீசார் என்னிடத்தில் காவல் நிலையத்தில் வைத்து காட்டி அடையாளம் கேட்டார்கள். முதலில் என் தங்கை அவைகள் தனது கணவருடையது என்று கூறினார். நானும் என் தங்கை கூறியதற்கு பின்னீடு அவைகள் பெதலீஸ்

என்பவருக்கு சொந்தமானவை என்று கூறினேன். பெதலீஸ் காணாமல் போவதற்கு முன்பாக 6 மாதங்களுக்கு முன்பு நான் அவரை நேரடியாக பார்த்துள்ளேன். இறந்து போனவர் எனது தங்கையின் கணவர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளின் பெயர்களை போலீசார் சொல்லிக் கொடுத்ததின் அடிப்படையில் தான் நான் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.